செ. கு. எண்: 148 நாள்:15/04/2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 15.4.2012

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், சத்யா நகரில் 13.4.2012 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் திரு. மாரியப்பன் என்பவரின் மகன் ராஜா, திரு. ஜெயராஜ் என்பவரின் மகன் கந்தசாமி மற்றும் திரு. செல்லமுத்து என்பவரின் மகன் குணசேகரன் ஆகியோர் பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்ற செய்தியைஅறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த தீ விபத்தில் அகால மரணமடைந்த ராஜா, கந்தசாமி மற்றும் குணசேகரன் ஆகியோரின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த தீ விபத்தில் 9 பேர் பலத்த தீக்காயம் அடைந்தனர் என்பதை அறிந்து நான் வருத்தம் அடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், திண்டுக்கல் மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இவ் விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த மூன்று நபர்களின் குடும்பங்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்தும், ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்தும், ஆக மொத்தம், தலா இரண்டு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு: –
**இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.